**<u>எழுத்துமூலப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்களின் போது, நிரப்புவதற்கு எஞ்சியுள்ள வெற்றிட எண்ணிக்கையை விட அதிகளவான பரீட்சார்த்திகள் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் தெரிவு செய்வதற்கான நடைமுறை (அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் : 01/2024)</u>**

1. தெரிவு செய்யும் முறை - திறனை மதிப்பீடு செய்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையின் பின்னர் நடாத்தப்படும் திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை

2. தெரிவு செய்யும் நடைமுறையின் உள்ளடக்கம்

   I. எழுத்துமூலப் பரீட்சை – வாய்மொழி தர்க்க அறிவு மற்றும் எண் கணித தர்க்க அறிவை மதிப்பீடு செய்வதற்கான இரண்டு வினாத் தாள்கள்.

   II. திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை – பதவிக்குத் தேவையான இனங் காணப்பட்ட திறமைகளை மதிப்பீடு செய்வதற்கான வினாக்களைக் கொண்டமைந்துள்ளது.

3. நேர்முகப் பரீட்சையின் கட்டமைப்பு

| | | |
|---|---|---|
| மூன்றாம் நிலை மட்டத்தின் விசேட தரத்திற்குக் கீழுள்ள –தொழிநுட்பம் சாராத சேவை வகுதிகள்Æசேவைகளின் தரங்கள் | மூன்றாம் நிலை மட்டத்தின் விசேட தரத்திற்குக் கீழுள்ள –தொழிநுட்பம் சார் சேவை வகுதிகள்Æசேவைகளின் தரங்கள் | குறிப்பிட்ட ஒரு துறையில் Æ விடயத்தில் கல்வித் தகைமைÆஅனுபவம் அல்லது குறித்த ஒரு பதவியில் ஆகக் குறைந்த சேவைக் காலம் தகைமைகளாகத் தேவைப்படும் சிரேஷ்ட மட்ட சேவைகள் அல்லது சேவை வகுதிகள்<br><br>உ-ம் : இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை |
| | | |

| தேர்வு | புள்ளிகள் சதவீதம் |
|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | 70% |
| நேர்முகப் பரீட்சை | 30% |

| தேர்வு | புள்ளிகள் சதவீதம் |
|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | 30% |
| நேர்முகப் பரீட்சை | 70% |

| தேர்வு | புள்ளிகள் சதவீதம் |
|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | 30% |
| நேர்முகப் பரீட்சை | 70% |

குறிப்பிட்ட ஒரு துறையில் Æ விடயத்தில் கல்வித் தகைமைÆஅனுபவம் அல்லது குறித்த ஒரு பதவியில் ஆகக் குறைந்த சேவைக் காலம் தகைமைகளாகத் தேவைப்படாத சிரேஷ்ட மட்ட சேவைகள் அல்லது சேவை வகுதிகள்

உ-ம் : இலங்கை திட்டமிடல் சேவை (திறந்த ஆட்சேர்ப்பு)

| தேர்வு | புள்ளிகள் சதவீதம் |
|---|---|
| எழுத்துமூலப் பரீட்சை | 70% |
| நேர்முகப் பரீட்சை | 30% |

4. மதிப்பீட்டு அளவுகள்

I. எழுத்துமூலப் பரீட்சை

| வினாப்பத்திரம் * | புள்ளிகள் |
|---|---|
| வாய்மொழி தர்க்க அறிவு | 100 |
| எண் கணித தர்க்க அறிவு | 100 |

* சேவை மட்டத்திற்கு அமைய வினாக்களின் தரம் மாற்றமடையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிறுவனம் ஒன்றினால் எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்படும். பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானது குறைவாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் இது கணனி அடிப்படையிலான தேர்வொன்றாக அமையலாம்.

II. திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை

இனங்காணப்பட்ட ஒவ்வொரு திறமையும் பின்வரும் 1-7 எனும் மதிப்பீட்டு அளவுக்கு அமைய மதிப்பீடு செய்யப்படும்.

| விபரம் | | புள்ளிகள் |
|---|---|---|
| வெளிப்படுத்தாதிருத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்கான நேர்மறையான சான்றுகள் இல்லை | 1. |
| மிகக் குறைந்த அளவில் வெளிப்படுத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்கான நேர்மறையான சான்றுகள் வரையறுக்கப்பட்டவையாகும். சான்றுகளில் நிலைபேறுதன்மை இல்லை. | 2. |
| சாதாரண மட்டத்தில் வெளிப்படுத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்கு சாதாரண மட்டத்தில் நேர்மறையான சான்றுகள் உள்ளன. எனினும் சான்றுகளில் நிலைபேறுதன்மை இல்லை. | 3. |
| ஏற்றுக்கொள்ளத்தக்க மட்டத்தில் வெளிப்படுத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்குப் போதிய நேர்மறையான மற்றும் நிலைபேறுதன்மையுடனான சான்றுகள் உள்ளன. | 4. |
| நன்றாக வெளிப்படுத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்குத் தேவையான அளவு போதிய மற்றும் நிலைபேறுதன்மையுடனான நேர்மறையான சான்றுகள் உள்ளன. | 5. |
| மிக நன்றாக வெளிப்படுத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்குத் தேவையான அளவு போதிய மற்றும் நிலைபேறுதன்மையுடனான சான்றுகள் உள்ளன. சில சான்றுகள் உத்தேச திறமை மட்டத்தை விஞ்சுகின்றன. | 6. |
| சிறப்பாக வெளிப்படுத்தல் | திறமை காணப்படுகிறது என்பதற்கான சான்றுகள் உத்தேச மட்டத்தை முற்றாக விஞ்சுகின்றன. | 7. |

## 5. நேர்முகப் பரீட்சைச் சபை

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.